1303

1303

ஹிட்லர் தன்

சுபாவத்தை வெளிப்படுத்தி எழுதிய

‘என் பிரயத்தினம்’

(‘மைன் காம்ப்’)

ஆர். ஸி. கே. என்ஸார்

எழுதியது

OFFICE OF T.E [illegible] OF BOOKS
18 SEP 1941
MADRAS

உலக விவகாரங்களை விளக்கும்

ஆக்ஸ்போர்ட் சிறு நூல்கள்

உலக விவகாரங்களை விளக்கும்

ஆக்ஸ்போர்டு சிறு நூல்கள்

ஹிட்லர் தன்
சுபாவத்தை வெளிப்படுத்தி எழுதிய
'என் பிரயத்தினம்'
('மைன் காம்ப்')

ஆர். ஸி. கே. என்ஸார்

எழுதியது

2620

923.143

INDIAN BRANCH

ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸிடி ப்ரெஸ்

பம்பாய் கல்கத்தா மதராஸ்

1941

தமிழில் முதற் பதிப்பு *1941*

V55, 147

ஹிட்லர் தன் சுபாவத்தை வெளிப்படுத்தி எழுதிய ‘என் பிரயத்தினம்’ (‘மைன் காம்ப்’)

வெளிப்படையாகக் கூறுவது ஏன்?

அரிய பெரிய காரியங்களைச் செய்து முடிப்போர் பலர் காணப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் தங்களை அந்தக் காரியங்களிலே ஈடுபடுத்தும் கருத்துகளையும் கொள்கைகளையும் முன்னதாகவே வெளிப்படையாகக் கூறுவதில்லை. அடோல்ப் ஹிட்லரோ அப்படிப்பட்டவர் அல்லர். அவர் ஒரு சமூக இயக்கத்திலே சேர்ந்து, அதற்காக அஸ்திவாரம் தொடங்கிப் பாடுபட்டவர். ஆகையால் அவர் தம் சிஷ்யர்களுக்கு உள்ளத்தில் உள்ளதையெல்லாம் வெளியிட்டுப் பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஐரோப்பிய யுத்தத்திற்குப் பிறகு தோன்றியதும் ‘நாஷனல் ஸோஷலிஸ்ட்’ என்று பிரசித்தி பெறப்போவதுமான சிறு சங்கத்திலே சேரும் பொழுதே, அச்சங்கத்தை மற்றைக் கட்சிகளோடு உறவாடும் சாதாரண அரசியற் கட்சியாக்கவேண்டும் என்ற குறுகிய நோக்கத்தை மேற்கொள்ளாமல், வருங்காலத்திலே வெகு தூரம் நோக்கம் செலுத்தி, மற்றைக் கட்சிகளையெல்லாம் ஒதுக்கித் தள்ளி அப்புறப்படுத்தும் புரட்சிக் கட்சியாகத் தம் சங்கத்தை அமைக்கவே அவர் பெரிதும் முயன்றார். ஆனால் அவரது நோக்கம் பூர்ணப் புரட்சி பெறுவதோடு நின்றுவிடவில்லை. அவர் சர்வாதிகாரம் பெற விரும்பியதின் காரணம், அந்த அதிகாரத்தைக்கொண்டு தாம் மேற்கொண்ட தேசிய திட்டத்தைக் கையாண்டு ஜெர்மானியர் அனைவருக்கும் முன்னேற்றம் அளிக்கவேண்டும் என்பதே. ஹிட்லர் ‘கபடமற்றவர்’ என்று சொல்வதின் கருத்தும் இதுவேயாகும்.

ஆனால், அவர் மேற்கொண்ட காரியம் மிகவும் சிரமமானது. அவர் விதித்த திட்டத்தின்படி ஜெர்மானியர் பல கஷ்டங்களைச் சகித்துக்கொண்டு ஓயாது உழைக்கவேண்டும்; முடிவிலே ஒரு மகாயுத்தம் நடத்தவும் தயாராக இருக்கவேண்டும். இதற்கு ஆறு அல்லது எட்டுக்கோடி ஜனங்களின் சம்மதத்தைப் பெறவேண்டும் என்றால், அவர்களுக்குக் காரண காரியங்களையெல்லாம் தெளிவாக விளக்கவேண்டும் அல்லவா? 'என்னைப் பின்பற்றி வாருங்கள்' என்றால், 'ஏன்' என்று கேட்கமாட்டார்களா? சாதாரண ராஜீய திட்டங்களால் எல்லோருடைய மனத்தையும் கவர இயலுமோ? உலக வாழ்க்கைக்குரிய நல்வழி ஒன்றைக் காட்டி, 'வாழ்க்கையின் தத்துவம்,' 'தேசியத்தின் நோக்கம்' முதலிய சொற்களுக்குப் புதிய பொருள் அமைத்துக்காட்டும் ஒரு புதுத் திட்டத்தை அமைக்கவேண்டியது அவசியம் அன்றோ?

நூலின் குண குணங்கள்

இவ்விதப் 'புதிய திருஷ்டி' (வெல்டன் சாங்) அளிப்பது 'என் பிரயத்தினம்' (மைன் காம்ப்) என்னும் நூல். இந்நூலிலே விஷயங்கள் ஒழுங்காக வகுக்கப்பெற்று, கிரமமாக விவரிக்கப்படவில்லை. இதன் முற்பாகமானது, 9-11-1923-ல் ஒடுக்கப்பட்ட 'ம்யூனிக்' கலகத்திலே சேர்ந்ததற்காகத் தண்டிக்கப்பட்டு ஹிட்லர் சிறைவாசஞ் செய்தபோது, 1924-ல் எழுதப்பெற்றது. பிற்பகுதி விடுதலையான பின்பு எழுதியது; கடைசிப்பக்கம் 1926 நவம்பர் மாதத்திலே எழுதி முடிந்தது.

இந்நூலானது சுபசரிதம், சரித்திரம், கொள்கைகள், வசைமொழிகள் முதலிய எல்லாங்கொண்ட ஒரு 'அவியல்' போன்றது. 'இதன் ஆசிரியர் இளமையில் பள்ளிக்கூடத்தில் கல்வி பயிலாததால், திருந்தாத முரட்டு மனோபாவங்கள்

கொண்டிருக்கிருர்’ என்பது இதனை வாசிப்போருக்கு நன்கு விளங்கும். பிற்காலத்தில் ஹிட்லர் பல நூல்களைப்படித்தும் வாக்கு வாதங்கள் செய்தும் பிரசங்கங்கள் புரிந்தும் திறம் படக்கூறும் வன்மையைப் பெற்றிருப்பதும் இந்நூலிலே விளங்குகின்றது. இளமையிற் கல்வி பயின்று அறிவு பண்படவில்லையாதலால், விஷயங்களை ஒழுங்குபடுத்திக் கோவையாகக்கூறும் திறமை இவருக்கு வாய்க்கவில்லை என்பதையும் இந்நூலால் தெரிந்துகொள்ளலாம். ஒரு விஷயத்தினின்றும் வேருென்றிற்கு அடிக்கடித் தாவுகிருர். இவரைப்போலச் சந்தைக் கூட்டங்களிலே பேசிப் பழகிய பேச்சாளர்களுக்கு இது இயல்பு. பேச்சும் அடிக்கடி விஷயத்தைவிட்டு எங்கேயோ போய்விடும். சொன்னவற்றையே திரும்பத் திரும்பச் சொல்வதால் வாசிப்போர்க்கு அலுப்பு உண்டாகும். விஷயங்களைப் பல அதிகாரங்களாக வகுத்துக்கொண்டு கூறுவதுபோல மேலுக்குத் தோன்றினுலும், ‘இன்ன பக்கத்திலேதான் இன்ன விஷயம் வரும்’ என்று சொல்ல இயலாது; விஷயங்கள் அப்படிச் சிதறிக் கிடக்கின்றன. இதனுல் பிறநாட்டார் இந்நூலை வாசிக்கும்போது குழப்பம் உண்டாகுமே தவிர, பொருள் விளங்காது. ஆயினும், முக்கியக் கொள்கைகளை நன்ருக மனதிலே பதியவைக்கும் ஆணித்தரமான நூல் என்றே இதனைச் சொல்லவேண்டும். ஏனெனில், விஷயங்களைக் கோவையாகக் கூருவிடினும், அடிப்படையானதோர் தத்துவம் நூல் முழுவதிலும் வியாபித்து இருப்பதால், தாறுமாருகக் கிடக்கும் பல கயிறுகளைப் பின்னிப் பரப்பியதொரு பெரு வலைபோன்று இந்நூல் விளங்குகின்றது.

எதிரிகளிடமிருந்து ஹிட்லர் கற்றுக்கொண்டவை

பிறநாட்டார் இந்நூலைப் படிப்பதற்கு இன்னொரு இடையூறு உண்டு. ஐரோப்பிய சரித்திர சம்பந்தமான பல விஷ

யங்களையும் அறியாதவர்களுக்கு, ஹிட்லர் தன் சுய சரிதை யாகக் கூறும் பகுதிகள் விளங்கமாட்டா. சென்ற மகா யுத்தத்திற்கு முன்பு 'வியன்னு' நகரத்திலே தமக்கு நேர்ந்த அனுபவங்களே தம் நூலிலே காணப்படும் மனேபாவங் களுக்குக் காரணம் என்று ஹிட்லரே கூறியுள்ளார். 'ஹாப்ஸ்பர்க்' அரசவமிசம், 'ஸெக்' சாதியார், 'ஸோஷ லிஸ்ட்' கட்சியார், 'பார்லிமெண்ட்'களின் ஆட்சிமுறை இவற்றையெல்லாம் ஹிட்லர் வெறுப்பதற்கும் மேற்சொன்ன அனுபவங்களே காரணம். 'வியன்னு ஸோஷலிஸ்ட்' கட்சி யாரிடமிருந்தே கொள்ளைக்காரர் கையாளுதற்குரிய பயங்கர மான தொழில் முறைகளை அறிந்து, அவற்றைத் திருத்தி இன்னும் அதிக பயங்கரமானவைகளாகச் செய்தார். இம் முறைகளை, முதலிலே தமது நாட்டிலும், பிறகு வெளிநாடு களிலும் இவர் கையாண்டுவந்தார். ஹிட்லரின் நூலினின்றும் மொழி பெயர்த்துக் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் இரண்டு பகுதிகளும் இம்முறைகளை நன்கு விளக்கக்கூடும்.

சந்தேகமோ பலஹீனமோ காணப்படும் எதையும் பொதுஜனங்கள் பாராட்டுவதில்லை.

பொதுமக்களின் சுபாவம் பெண்டிரின் சுபாவத்தை யொத்தது. அபலையான பெண்மகள் பலவானுன ஆண் மகனையே விரும்புகிருள். அவளுடைய மனமானது புத்தி யுக்திகளிலே செல்லாது. தனக்குப் பலமில்லையாதலால் அவனது பலத்தை நாடுகிருள். தன்னை அடக்கியாள ஒரு பலவான் வேண்டுமென்று ஆசைப்படுகிருளே யொழிய, தான் அடக்கியாள்வதற்கேற்ற பலமில்லாத புருஷன் ஒருவன் வேண்டுமென்று அவள் நினைப்பதில்லை. இது போலவே, பொதுசனங்களும் தங்கள் இஷ்டப்படி நடந்து கொள்ளச் சுதந்திரம் அளிப்பவர்களை ஆதரியாமல், சிறிது விலகிச் சென்ருலும் கண்டிப்பான உத்தரவுகளைப்போட்டு அதட்டி ஆளுவோரையே நாடுகிருர்கள். இன்ன சந்தர்ப்

பத்தில் இன்னவாறு நடந்துகொள்ளவேண்டும் என்று காட்டினுற் போதாது, பொதுசனங்களுக்கு; இன்னவாறு தான் இருக்கவேண்டும் என்று அவர்களை அதட்டி அச்சுறுத்தவேண்டும். இவ்வாறு அவர்களை ஏவிப் பணி கொள்வோரின் கொள்கையில் இருக்கக்கூடிய தவறுகள் அவர்களுக்குப் புலப்படா. அதிகார தோரணையிலே, தயை தாட்சிணியம் இன்றி முரட்டுத்தனமாய் விதிக்கப் படும் உத்தரவுகளுக்கே பொது மக்கள் கீழ்ப்படிவார்கள். (181-வது ஜெர்மன் பதிப்பு. பக். 44)

'பாமர சனங்கள் வேண்டுவது அதிகார தோரணையே; வலக்கையால் பிரம்பை வீசியோங்கி அடிப்பதே; யாராலும் மீறவொண்ணுத அரசாக்ஞையே. சீறிச் சாபமிடும் ரிஷி வேஷத்தை நீக்கிவிட எவனுக்கும் தைரியம் இராது.' என்று 'ப்ரௌனிங்' என்னும் ஆங்கில கவி கூறியுள்ளார்.

பாமர சனங்களின் மனப்பான்மையை இவ்வாறு வருணித்திருப்பது பொருத்தமே. ஹிட்லர் சீறிச் சாப மிடும் ரிஷி வேஷம் பூண்டிருக்கிறுர்; அதை என்றும் கலைப்பதில்லை. 'பொதுசன சமூகம் எதையும் நம்பி ஏமாறும் மனப்பான்மையுடையது' என்பதை நன்கறிந்து அதனைப் பயன்படுத்திக் கொள்பவர் ஒருவர் உண்டு என்றுல், அவர் ஹிட்லரேயாவர். ஆனுலும், ஓர் ஆச்சரியம்: தாம் செலுத் தும் அதிகாரத்திலுள்ள கொடுமைகளை மறைக்க முயலாது, தம்மால் ஏமாற்றப்படும் பாமர சனங்களின் முன்னிலையி லேயே பகிரங்கமாக அவற்றையெல்லாம் விரித்துக் கூறுகிறுர்.

வேறெரு பகுதியிலே, 'ஸோஷல் டெமோக்ராட்ஸ்' என்னும் கட்சியார் கையாளும் தொழில் முறைகளைப்பற்றி ஹிட்லர் கூறுகிறுர். அது வருமாறு:—

இவர்கள் பராக்கிரமசாலி என்று பயப்படத்தக்க பகை வன் ஒருவனைத் தேர்ந்தெடுத்து அவன்மீது ஓயாமல் பல பழிகளைச் சுமத்துவார்கள். அதனுல் அந்த விரோதியின்

மனம் தளர்ந்துபோகும். அந்தச் சமயத்தை அறிந்து, அவனைத் தாக்கிக் கொன்றுவிடுவார்கள். இதனால் மனச் சாந்தி உண்டாகும் என்பது அவர்கள் நினைப்பு.

அசடுகள் ; இதனால் மனச்சாந்தி உண்டாகுமா ? திரும் பத் திரும்ப இப்படிச் செய்தால் இந்த நாய்களுக்குப் பயந்து பயந்து பகைவர்களது பலங் குன்றிவிடும்; அவ்வளவுதான்.

மேற்கண்ட வாக்கியங்களே ஹிட்லர் தம் பகைவர் களிடம் எவ்வாறு நடந்துகொண்டார் என்பதை விளக்கப் போதுமானவை. முதலிலே, உள்நாட்டிலும், பிறகு 'ஸ்சுஸ் நிக்', 'பெனேஷ்' முதலானவர்கள் விஷயமாய் வெளிநாட்டு விவகாரங்களிலும் ஹிட்லர் இம்முறையைக் கையாண்டனர். தாம் கண்டறிந்த முறையைக் கண்டிப்பாகக் கையாளவேண் டும் என்று ஹிட்லர் தீர்மானித்தே இவ்வாறு செய்தனர் என்பதை இந்நூலால் அறியலாம்.

கைச்சீட்டை மலர்த்திக் காட்டுகை

இந்நூலைக் கற்பதிலுள்ள சில இடையூறுகள் மேலே சொல்லப்பட்டன. இதன் பதிப்புரிமை ஆசிரியருக்கே இருந்ததாலும், நூலை முழுவதும் வாசித்துச் சரியான அபிப் பிராயத்தைக் கொள்ளமுடியாத வகையிலே முக்கியமான சில பகுதிகளை நீக்கியே ஆங்கிலத்தில் அச்சிட அனுமதித்த தாலும், ஜெர்மனிக்கு வெளியிலே (மைன் காம்ப்) 'என் பிர யத்தினம்' என்னும் நூலை யாரும் ஒழுங்காகப் படித்தறிந்த வர்கள் இல்லை. சமீப காலத்திலேதான் நூல் முழுவதும் ஆங் கிலத்திலே மொழிபெயர்க்கப்பட்டு அச்சாகி வெளிவந்தது. இதை இப்போது வாங்கிப்படிப்பவர்கள், இதிலே கூறப்படும் விஷயங்களைப்பற்றி சமீப காலம் வரையில் பிரிட்டிஷ் பத்தி ரிகைகளுக்கும் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கும் இருந்த அறி

யாமையைக் கண்டு வியப்பார்கள். சீட்டாட்டத்திலே ஒரு வன் தன் கைச்சீட்டுக்களை மலர்த்திக் காட்டினாலும் மற்றை யோர் அவற்றைப் பாராமலே அசட்டையாக இருப்பது போல, ஹிட்லர் தாம் ஆடப்போகும் சீட்டுக்களையெல்லாம் 1933-ம் வருஷத்திலேயே மலர்த்திக் காட்டியும் இவர்கள் சும்மாயிருந்துவிட்டார்கள். அந்தச் சீட்டுக்களையே ஹிட்லர் ஆடி வருகிறார். அவர் வெளிப்படுத்தியவற்றை யெல்லாம் விரித்துக் கூறுவதற்கு இச்சிறுநூல் இடந் தராது. உலக வாழ்க்கையை எவ்வாறு நோக்கவேண்டும் என்று அவர் காட்டிய வழியை விளக்கி, இராச்சிய தந்திரத்திலும் வெளி நாட்டு விவகாரங்களிலும் அவர் கையாண்ட கொள்கைகளைச் சுருங்கக் கூறுவதற்கே இயலும். ஜெர்மானியர் அல்லாத வாசகர்களுக்கு வேண்டியதும் இவ்வளவே யாம்.

ஹிட்லர் கூறும் சாதிக்கொள்கை

சாதியைப்பற்றி ஹிட்லர் கொண்டுள்ள கொள்கை யானது, பிறரிடமிருந்து அவர் ஏற்றுக்கொண்டது. ஆனாலும் அவர் அக்கொள்கையிலே தீவிரமான நம்பிக்கை கொண் டிருக்கிறார். அதன்படி, மானிடவர்க்கமானது வேறுபட்ட பலசாதிகளைக் கொண்டது. அவற்றுள் ஒன்றான 'ஆரியம்' எனப்படும் 'நார்டிக்' சாதி மட்டுமே, கலை, சமுதாயம் முதலிய விஷயங்களிலே முன்னேற்றம் அடைவதற்கு உரி யது. இந்தச் சாதியினரே மீண்டும் மீண்டும் எண்ணிறந்த தடவைகளில் உலகசரித்திரமாகிய நாடகத்தில் ஒரே வகை யாய் நடித்தவராவர். இவர்களே தம் பிறவிக்குணத்தின் மேன்மையால் மற்றவர் வசிக்கும் நாடுகளின்மீது படை யெடுத்துச் சென்று, அவர்களை வென்று தங்கள் காரியங்களை அவர்களைக்கொண்டு செய்து முடித்து, மேலான நாகரிகங் களை நிலை நாட்டினார்கள். இந்த நாகரிகங்களெல்லாம் ஒவ்

வொன்ருக அழிந்து விட்டன. ஏன்? 'பிற சாதிகளோடு கொள்வினை, கொடுப்பினை செய்ததால் நேர்ந்த ஸங்கர தோஷத்தால், வெற்றிபெற்ற சாதியருடைய இரத்தம் அசுத்தப்பட்டு விட்டது. தங்கள் சாதிக்கே உரிய குணாதிசயங்களால் மட்டுமே நிலைத்து நிற்கும் நாகரிகமானது, இரத்தக் கலப்பால் சாதி அசுத்தப்படாமல் இருந்தால் மட்டுமே நிலைத்து நிற்கும். இவர்களது கடமை, இரத்தக்கலப்பால் தங்கள் சாதி கெடுருமல் காப்பதும் தங்கள் சாதியினரின் தொகையைப் பெருக்கி உலகெங்கும் அவர்கள் பரவி நிலைத்திருக்கச் செய்வதுமே. இவ்வாறு இவர்கள் எங்கும் பரவிச் சென்று அதிகாரம் வகிப்பது தங்கள் நன்மையை மட்டும் கருதியதால் அன்று. தங்கள் சாதிக்குப் புறம்பான மானிட சாதிகள் அனைத்தும் நாகரிகம் பெற்று முன்னேற வேண்டுமானுல், அவையனைத்துக்கும் இந்த உயர் சாதியின் உதவி அவசியம் வேண்டும்; வேறு வழியில்லை.

இக்காலத்திலே இந்தக் கடமையையும், உரிமையையும் பெற்று விளங்கும் சாதி எது என்ருல் ஜெர்மானிய சாதியே. ஜெர்மானியரே சிறப்புற்ற 'நார்டிக்' சாதி. அவர்களோடு ஒருவாறு ஒப்பிடக்கூடிய ஐரோப்பிய மக்கள் பிரிட்டிஷ் மக்களேயாவர்; ஐரோப்பாவிற்கு அப்பால் வெகுதூரத்திலுள்ள பெரும் பிரதேசங்களிலே பிரிட்டிஷார் 'நார்டிக்' சாதிமக்களைக் குடியேற்றி இருப்பதால், ஹிட்லருக்கு பிரிட்டிஷாரிடம் நன்மதிப்பு உண்டு. ஆனுல் ஜெர்மனிக்கு அருகேயுள்ள மற்றைச் சாதியாரிடம் இவருக்கு நன்மதிப்பு இல்லை. பிரெஞ்சுக்காரர் எப்பொழுதுமே கலப்புச் சாதியைச் சேர்ந்தவர்கள். நீக்கிரவரும் ஐரோப்பியரும் கலப்பதால் உண்டாகும் சாதிக்கு 'முலட்டோ' என்று பெயர். பிரான்சு தேசம் 'முலட்டோ' நாடாகி வருகிறது என்று 'மைன் காம்ப்' தெரிவிக்கிறது. 'ஸ்லாவ்' மக்கள் அனைவரும்

கீழ்ச்சாதி மக்கள். ஜெர்மானியரின் முன்னிலையில் அவர்களுக்கு யாதொரு உரிமையும் இல்லை. ஜெர்மன் அதிகாரிகள் 'ஸ்லாவ்' நாட்டைக் கைப்பற்றி ஜெர்மானியரைக் குடியேற்றுவதற்காக அங்குள்ளவர்களை வெருட்டித் துரத்தினுல், அவர்கள் தேசபக்தி காட்டியதோடு தர்மச் செயலையும் செய்தவர்கள் ஆவர். 'லெபென்ஸ்ரௌம்' எனப்படும் உயர் சாதி வாசஸ்தலமாகப் பல பிரதேசங்கள் மாறுவதும் மானிட சமூகத்தின் நன்மைக்கே அன்ருே ?

இதுகாரணம் பற்றியே, ஜெர்மன் அதிகாரத்திற்கு உட்பட்ட 'ஸ்லாவ்' மக்களை ஜெர்மானியரர்க்கக் கருதுவதும் தவருகும். 'ஸெக்' சாதியார் ஜெர்மன் பாஷை கற்பதற்கு உதவிய ஜோஸெப் II முதலான 'ஹாப்ஸ்பர்க்' மன்னர்களின் செய்கையும் தவறு. சாதிதான் உயர்ந்தது ; பாஷையன்று. ஜெர்மன் பாஷை பேசும் 'ஸ்லாவ்' மக்களால் சாதித்தூய்மைக்கு அபாயம் ஏற்படலாமேயொழிய, நன்மை ஒன்றும் ஏற்படாது. [1]

ஆக, இவ்வுலகம் இருவகைச் சாதிகளையுடையது ; ஒன்று சிருஷ்டி சக்தியும் பராக்கிரமமும் வாய்ந்த உயர்சாதி ; மற்றவையெல்லாம் அதன் கையில் மெழுகுபோலாகி, தாமாக முன்னேற்றம் அடையக் கூடாதவையாய் உள்ளன. மூன்ரும் வகைச் சாதியும் ஒன்று உண்டு ; இதற்கு யாதொரு நற்குண

[1] இவ்வாறு 'ஹாப்ஸ்பர்க்' வமிசத்து மன்னர்களைத் தாக்கும் இந்நூலே, 'ப்ரான்ஸிஸ் ஜோஸெப்' சக்கரவர்த்தி 'ஸ்லாவ்' பாஷைகளின் நன்மைக்காக விதித்த 'படேனி' பாஷை சம்பந்தமான உத்தரவுகளையும் தாக்குகிறது. இந் நூலிலே காணப்படும் முரண்பாடுகளில் இது ஒன்று. இதனுலும், 'ஹாப்ஸ்பர்க்' மன்னர்களின்மேல் ஹிட்லருக்கு இருக்கும் வெறுப்பை விளங்கக்காட்டும் வேறு நூற் பகுதிகளாலும், சென்ற மகா யுத்தத்திற்கு முன்பு ஹிட்லர் 'வியன்ன'விலே அகில ஜெர்மானிய சங்கத்திலே சேர்ந்த போது அவருக்கு இருந்த விரோத மனப்பான்மை நன்கு விளங்கும்.

மும் இல்லை. உயர் சாதியாலும் இதைத்திருத்தி இதற்கு முன்னேற்றம் அளிக்கமுடியாது. சாதிகளிலே இது சாத்தானைப்போன்று, தீமையெல்லாம் உருவெடுத்தாற்போல இருப்பது; இதற்கென்று ஒரு வாசஸ்தலமும் இல்லை. பிற சாதிகளிலே புகுந்து தீங்கு செய்வதில் இதற்கு அலுப்பு ஏற்படாது. பிற சாதிகள் வசிக்கும் பிரதேசங்களில் இது புகுந்து அவற்றையெல்லாம் அரித்துத் தின்றுவிடும். 'நார்டிக்' சாதிக்கே உரிய இடங்களிலும் இது ஆக்கிரமிக்கும்; இது தொட்டதையெல்லாம் அசுத்தப்படுத்திப் பயனற்றதாக்கி விஷமாகவும் மாற்றிவிடும் இயல்புடையது. இந்தச் சாதியைச் சேர்ந்தவர்களே யூதர்கள். இவர்களினும் 'ஸ்லாவ்' போன்ற சாதியினர் எவ்வளவோ மேல்; அந்த 'ஸ்லாவ்' சாதிகள் ஜெர்மன் (லெபென்ஸ்ரௌம்) வாசஸ்தலங்களில் உயர் சாதியினருக்கு அடிமைசெய்து வசிப்பதானால், கேடு ஒன்றும் இல்லை; நன்மைகள்கூட விளையும். யூதர்களையோ, எவ்வித நிபந்தனைகளுக்கு உட்படுத்தினாலும் போதாது; அவர்களை ஒழிப்பது ஒன்றே உபாயம்.

ஜெர்மனி இக்கொள்கையை ஆதரித்தது ஏன்?

சாதி சம்பந்தமான மேற்கண்ட கொள்கைகளை ஹிட்லர் புதிதாகக் கண்டு பிடிக்கவில்லை; இவை பிறரிடமிருந்து கற்றுக்கொண்டவையே. ஆனாலும் இவற்றை ஏன் ஏற்றுக்கொண்டார்? இதற்குள்ள காரணங்களை அறிந்துகொள்வது அவசியமன்று; இந்தக் கொள்கைகளை இவர் எவ்வாறு பயன்படுத்திக்கொண்டார் என்பதையே தெரிந்துகொள்ளவேண்டும். சில ஒதுங்கிய இடங்களிலே சில தனிப்பட்ட நபர்கள் கொண்டிருந்த ஒரு ஆபாசக் கொள்கையை, இவர் ஐரோப்பாவிலேயே மிகவும் வலுக்கொண்டதாய் நாட்டின் அரசியலை மாற்றி அமைப்பதற்கான அடிப்படையாகக் கொண்டார்.

1914-18-ம் யுத்தத்திற்குப் பிறகு ஜெர்மானியருக்கு இக் கொள்கை மிகவும் அனுகூலமாக அமைந்தது; யூதர்களுக்கு விரோதமாக இது பயன்பட்டதைப்பற்றி ஒன்றும் சொல்லத் தேவையில்லை. முன்பின் நேராத தோல்வி ஜெர்மனிக்கு ஏற்பட்டதும், அதிக லாபங்களை விரும்பிய வியாபாரிகளும் விலைவாசிகளைக் கொண்டு சூதாடுவோர்களும் நாட்டிற்கு அனேக கஷ்டங்களை விளைவித்தார்கள். முதலில், 'ரூர்' பிரதேசத்தைப்பற்றிய சச்சரவாலும், பின்பு 1929 நவம்பர் முதற்கொண்டு நாட்டிலே உணவுப்பொருள் கிடையாமலும் பஞ்சங்கள் அதிகமாயின. ஜெர்மானியர் மனச்சாந்தி பெற வேண்டுமானுல் யாரையாவது பலி கொடுத்தாகவேண்டும் என்று ஏற்பட்டது; இதற்கு ஏற்றவர்கள் யூதர்களே என்று ஹிட்லர் தம்முடைய கொடூரச் செய்கைகளால் நிரூபித்தார். இந்த யூதர்களைக் குற்றவாளிகள் ஆக்குவதற்கு எவ்விதமான பொய்களைக் கூறினுலும் நம்பலாம். யூதர்களை வேட்டை யாடுவது ஒரு கடமையாயிற்று. மற்றை நாடுகளிலுள்ள மக்கள் இந்த வேட்டையைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்னும் கவலையேயின்றி, ஹிட்லர் 1938 நவம்பர் கலகங் களில் இக்கடமையைக் கைப்பிடித்தார். ஆயினும் ஹிட்லர் கொண்ட 'வாழ்க்கை நோக்க'த்திலே ('வெல்டன் சாங்'கிலே)யுள்ள முக்கியமான கருத்து யூதர்களை ஒடுக்குவது அன்று; ஜெர்மானியரின் தொகை விருத்தியாகவேண்டும் என்பதே முக்கியமான கருத்து. இக்கருத்து வேரூன்றி வளர்வதற்கும் ஜெர்மானியரின் மனம் பக்குவப்பட்டிருந்தது. ஜெர்மானியர் மற்றைச் சாதியினருக்கு இல்லாத பெருமை களையுடையவர்கள் என்றும், அவர்களே மானிடவர்க்கம் முழு வதற்கும் தலைமை வகிக்கத்தக்கவர்கள் என்றும் பல்லாண்டு களாகவே பெருமையடித்துக் கொண்டிருந்தார்கள். வேறு சாதியினர் எவருக்கும் இவ்வாறு பெருமையடித்துக் கொள்

ளும் சுபாவம் இல்லை. பிரஞ்சுக்காரர், பிரிட்டிஷார், அமெரிக்கர் இவர்கள் அனைவரும் தங்கள் தங்கள் சமூகமே உலகத்திற்கு அதிக நன்மைகளைச் செய்திருக்கிறது என்று கூறி அதற்குரிய ருசுக்களைச்சேர்த்து சரித்திர பூர்வமாக தங்களுடைய பெருமையை நிலைநாட்டப் பார்க்கிறார்கள்; ஆனால் 'தாங்கள் சாதி பிறப்பாலேயே மேம்பட்டதோர் தனிச் சாதி' என்று அவர்கள் நினைப்பதேயில்லை. ஜெர்மானியரோ அப்படியன்று. இந்த விபரீத உணர்ச்சிக்கு வெளிப்படையான காரணங்கள் சில உண்டு. பிரஞ்சுக்காரர், பிரிட்டிஷார், அமெரிக்கர் ஆகிய இவர்களை ஒன்றாக்கியது ஏக ராச்சியாதிகாரமே; ஆனால், 'பிஸ்மார்க்கு'க்கு முன் ஜெர்மானியர் ஒரே சாதியினராக இருந்தும், ஒரே இராச்சியாதிகாரத்திற்கு உட்படாதிருந்தனர். 'பிஸ்மார்க்' காலேயுங்கூட ஜெர்மானியரில் முக்கால்வாசிப் பேர்களையே ஒரு இராச்சியாதிகாரத்தின்கீழ்க் கொண்டுவர முடிந்தது. எனவே, ஜெர்மானியர் பலரும் தங்களை ஒரே இராச்சியத்தைச் சேர்ந்தவர்களாகக் கொள்ளாமல், ஐரோப்பாவிலே பல பாகங்களிலும் சிதறுண்டுபோன ஒரு தனிச்சாதியினராகவும் அச்சாதியினர் தங்களோடு வசிக்கும் மற்றைச் சாதியினரினும் உயர்ந்தவர்களாகவும் நினைக்க நேர்ந்தது. இவர்கள் இப்படி நினைத்ததும் சரியானதென்றே தோன்றக்கூடும். ஏனெனில், ஐரோப்பாவின் மத்திய பாகத்திலும் கீழ்ப்பாகத்திலும் ஜெர்மானியர் இருந்த இடங்களிலெல்லாம் அவர்கள் பாடுபட்டு வேலை செய்து, பொய் பித்தலாட்டமின்றி வாழ்வதைக் காணலாம். சுகாதார வசதிகள் அமைந்த சுத்தமான வீடுகளிலே ஆரோக்கியமான வாழ்வு வாழ்பவர்களாயும், தங்கள் மக்களைக் கல்விச்சாலைகளுக்கு அனுப்பிக் கல்வி கற்பிப்போர்களாயும் இருக்கிறார்கள். இதற்கு நேர்மாறாக, 'ஸெக்' ஜாதியாரைத்தவிர 'ஸ்லாவ்' முதலிய ஜாதியினரோ முன்னேற்றம்

அடையாதவர்களாய் மொத்தத்தில் நாகரிகம் இல்லாதவர்களாய் சுகாதார உணர்ச்சியின்றியும் கல்விப் பயிற்சி இன்றியும் இருக்கிறார்கள். ஆனால் இந்த வித்தியாசத்திற்குக் காரணம் சாதி வேற்றுமை அன்று. இவர்கள் வாழ்ந்துவந்த நாடுகளின் சரித்திரமும், தொன்று தொட்டு இவர்கள் கையாளும் பழக்க வழக்கங்களும், பல காரணங்களால் இவர்களுக்கு ஏற்பட்ட தரித்திரமுமே இந்த வேற்றுமைக்குக் காரணங்கள். வேற்றுமை இருப்பதை மறுக்க இயலாது; எனவே, அதனின்றும் இவ்விதமான சாதிச் செருக்கு எழுந்தது ஆச்சரியம் அன்று.

1918-க்குப்பின் ஐரோப்பாவின் கீழ்ப்பாகங்களிலே அரசியல் சம்பந்தமாகச் செய்யப்பட்ட ஏற்பாடுகள் ஜெர்மானியரின் மனதைப் புண்படுத்தின. 'போல்' சாதியினருக்கும் 'ஸெக்' ஜாதியினருக்கும் சுதந்திரம் அளித்ததால் அவர்களுடைய ஆட்சியின்கீழ் சில ஜெர்மானியர் வசிக்க நேர்ந்தது. ஜெர்மானியன் எவனும் இதற்கு உடன்படமாட்டான். அமெரிக்கரை வென்று, ஒருவன் அங்குள்ள தெற்கு மாகாணங்களை நீக்குரோவரின் ஆட்சிக்கு உட்படுத்தினால், வெள்ளையரான அமெரிக்கர் அதற்கு உடன்படமாட்டார்கள் அல்லவா? ஆதலால், தாங்கள் அரசாளப்பிறந்த சாதியார் என்று கர்வங்கொண்டு ஜெர்மானியர் இவ்வுடன்படிக்கைகளைத் தாக்கினார்கள். அதனோடு நில்லாது, சிதறிக்கிடந்த ஜெர்மானியர் அனைவரையும் ஜெர்மன் அரசாட்சிக்கு உட்பட்டவர்களாகச் செய்து, ஜெர்மனியைச் சூழ்ந்துள்ள பிரதேசங்களை ஜெர்மானியருக்குரிய வாசஸ்தலங்களாக்கவேண்டுமென்று ஹிட்லர் தீர்மானித்தார். அவருடைய பிரசங்கங்களைக்கேட்டும், அவருடைய நூல்களை வாசித்தும், ஜெர்மானியர் இக்கொள்கையை ஆதரிக்கலானார்கள்.

'வாசஸ்தல'க் கோள்கை

இனி, 'லெபென்ஸ்ரௌம்' எனப்படும் ஜெர்மானிய வாசஸ்தலக் கொள்கையைச் சற்று விரிவாகக்கூறலாம். இது தான் பிற நாட்டு விவகாரங்களைப்பற்றி ஹிட்லரின் கருத்துக் களைத் திறந்துகாட்டும் திறவுகோலாகும். நூலின் முற்பகுதி 4-வது அதிகாரத்திலும், பிற்பகுதி 13-14-வது அதிகாரங் களிலும், இது விரிவாகக் கூறப்பட்டுள்ளது; மேலும் நூல் முழுவதிலும் இக்கொள்கையே காணப்படுகிறது.

ஒரு சாதி சுகமாக வாழ விரும்பினால் அதற்கு விரிவான வாசஸ்தலம் வேண்டும். தங்கள் தொகையைப் பெருக்குதல் 'நார்டிக்' சாதியின் முதற் கடமையாகும்; அவ்வாறு பெரு கிய சனங்களுக்குப் போதுமான வாசஸ்தலம் வேண்டும். இப்பொழுது ஜெர்மானியர் வசிக்கும் தேசமோ, தற்காலச் சனங்களுக்கே போதாது; வருஷத்திற்கு ஒன்பது லக்ஷம் பேர் சனத்தொகையில் கூடுதல் ஆகிவருகிறது [1]; இதனால் உண் டாகக்கூடிய பசி முதலிய துன்பங்களுக்குத் தக்க பரிகாரம் தேடாமற்போனால்,ஜெர்மானியர் விரைவில் அழிந்துபோவார் கள். இதற்குப் பரிகாரம் நான்கு வகை: (1) கர்ப்பத்தடை: இது சாதிக்கடமைக்கு நேர்மாறானது. (2) 'உள்நாட்டுக் குடியேற்றம்': அதாவது, நிலம் முழுவதையும் சிறு சிறு பண்ணைகளாகப் பிரித்து, குடியானவர்களிடம் ஒப்படைப் பது: இதனால் கஷ்டம் சிறிதளவுதான் நீங்கக்கூடும் என்று ஹிட்லர் கூறுவது சரி. (3) ஜெர்மனியின் தற்கால எல்லை களுக்கு அப்பாலுள்ள நிலங்களை ஜெர்மனியோடு சேர்த்து அங்கே ஜெர்மானியரைக் குடியேற்றுவது. (4) வெளிநாட்டு வியாபாரத்தையும் ஏற்றுமதியையும் பெருக்கி ஜெர்மானியர்

[1] வேண்டுமென்றே கூட்டிச் சொல்கிறார்.

களுக்கு யந்திரத்தொழிலால் சீவனம் அமைப்பது. முத லிரண்டு வழிகளும் பயன்படமாட்டா; பின்னிரண்டிலே ஒன்றைக் கைக்கொள்ளவேண்டும். 1870 முதல் ஜெர்மா னியத் தலைவர்கள் கையாண்டது நான்காம் வழி; அவர்கள் மூன்றாவது வழியைக் கைப்பற்றாதது தவறு என்கிறார் ஹிட்லர். தேச விஸ்தீரணத்தை அதிகமாக்கி வேளாண் தொழிலை விருத்திசெய்வதே ஹிட்லர் கைக்கொண்ட மார்க்கம்.

வல்லரசுக்குரிய பெருநாடு

ஏற்றுமதி செய்யலாம் என்ற வழியை ஹிட்லர் தவ றாகக் கருதியதற்கு மூன்று காரணங்கள் உண்டு. முதலாவது, ஏற்றுமதிச் சரக்குகளை உற்பத்திசெய்யும் யந்திரசாலைகள் நகரங்களிலேதான் இருக்கக்கூடும். அதனால் ஜெர்மானியர் பெரும்பாலாரும் நகரவாசிகளாய் விடுவார்கள். தாம் இளமை யில் ஏழையாய்த் தம்மூரை விட்டு 'வியன்னா' நகரத்திற்கு வந்து பட்ட கஷ்டங்கள் இவரை நகரவாசத்தை வெறுக்கும் படி செய்தன. இரண்டாவதாக, வெளிநாடுகளிலே இவர் தலையிட்டு அதிகாரஞ் செலுத்தமுடியாது. அங்கு ஜெர்மா னியருக்கு நேரும் மரியாதைக் குறைவால் உள்நாட்டிலுள்ள ஜெர்மானியரின் வாழ்க்கையிலும் துன்பம் உண்டாகும். மூன்றாவதாக, யுத்தம் வந்தால் சன நெருக்கமுடைய நகரங் களுக்குக் கேடு எளிதில் விளையக்கூடும். இந்நூல் எழுதப் பட்ட காலத்திலே ஆகாச வெடிகுண்டுகளைப்பற்றி ஹிட்லர் நினைக்காவிட்டாலும், ஆகாச யுத்த முறைகள் விருத்தியடைந் திருப்பதால் இவர் கூறிய இக்காரணம் ஒப்பக்கொள்ளத் தக்கதாக இருக்கிறது. ருஷியா, அமெரிக்கா, இவைகளைப் போல ஜெர்மனியும் அகன்றிருந்தால், அவ்வித நிலப்பரப்பே நாட்டிற்கு நல்லரணாகும் என்றே எண்ணினார். மேலும், வல்

லரசு என்றால் அதற்கேற்ப அகன்ற நிலப்பரப்பை ஆளவேண்டாமா? அக்காலத்தில் ஜெர்மனி வல்லரசாகவில்லை. ஒன்று, வல்லரசாக வாழவேண்டும்; அன்றேல், அழிந்து போகவேண்டும். எவ்வளவு நிலம் வேண்டும் என்றால், 'ஸோவியத் ருஷியாவைப் பார்; பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தைப் பார்; அமெரிக்காவிலுள்ள ஐக்கிய நாடுகளைப் பார்; பிரெஞ்சு சாம்ராச்சியத்தைப் பார்' என்கிறார் ஹிட்லர். எதனோடு ஒப்பிட்டாலும் ஜெர்மனிக்குள்ள நிலம் மிகக்குறைவே. அதிகப்படி நிலம் எவ்வாறு கிடைக்கும்? கடலுக்கு அப்பாலுள்ள குடியேற்ற நாடுகளால் யாதொரு பயனும் இல்லை; அவற்றுள் ஒன்றேனும் லக்ஷக்கணக்கான குடியானவர்கள் வாழத்தக்கதாக இல்லை. மேலும், ஜெர்மானியரின் தற்கால வாசஸ்தலத்திற்குக் கிழக்கிலும் தெற்கிலும் அகன்ற சம வெளி ஒன்று இருக்கிறது; செழிப்பான பூமி; கீழ்ச் சாதியினரே இங்கே வசிக்கிறார்கள்; சன நெருக்கடியும் இராது. தரை மார்க்கமாகவே சென்று இங்கே வாழ்வோர்களைப் போரிலே வென்று வெருட்டித் துரத்த முடியும். எனவே, இதுவே சரியான உபாயமாகும்.

ஏரால் உழவேண்டின் போரால் பெறவேண்டும்

இந்நிலப்பகுதிகள் எவ்வாறு கிடைக்கும்? 'ஆதியில் ஜெர்மானியருக்கு ஆஸ்திரியாவும் கிழக்குப் பிரஷியாவும் எப்படிக் கிடைத்தன?' என்று பதிலுரைக்கிறார் ஹிட்லர். இப்பொழுது ஜெர்மானியர் வாழும் நாடு எவ்வாறு ஜெர்மானியருக்குக் கிடைத்தது? ஜெர்மன் வாட்படை முன் சென்றால் மட்டுமே, ஏர்ப்படை பின்செல்லக்கூடும். 'சைன்னிய பலத்தாலேதான் வேண்டிய நிலப்பகுதிகளை அடையலாம்; முதற் பலியாவதற்கு ஏற்றது ருஷியா' என்று வாய் கூசாமற் கூறுகிறார். தம்முடைய கொள்கையை மறுப்ப

வர்க்கு ஹிட்லர் இவ்வாறு பதிலளிக்கிருர்: 'நாட்டு எல்லைகளும் உரிமைகளும் எங்குமே பலத்தாலேயே ஸ்தாபிக்கப்படுவன; ருஷியாவிலே 'போல்ஷவிக்' குழப்பம் ஏற்பட்டது ஜெர்மனிக்கு நல்லகாலம்; தருணம் வாய்த்தால் உடனே பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஜெர்மனி பிழைத்திருக்கவேண்டும் என்ருல், கிழ்ப்புறத்திலுள்ள பிரதேசங்களைத் தன்னதாக்கிக் கொள்ளவேண்டும்; இது யுத்தமின்றி முடியாத காரியம்; அதனுல் உடனேயே யுத்தத்திற்குச் சித்தமாகவேண்டும். 'வெர்ஸேல்ஸ்' உடன்படிக்கையில் ஆயுதங்கள் செய்வதையும் படை திரட்டுவதையும்பற்றியுள்ள நிர்ப்பந்தங்களைப் பொருட்படுத்தக்கூடாது. அவற்றை மீறி நடக்கவேண்டும்.' ஹிட்லர் அதிகாரம் பெற்றபின் தாம் சொன்னவாறே செய்துமுடித்தார்: ஆயுதங்கள் சேகரிக்கப்பட்டன; 'ரைன்' பிரதேசத்திலே அரண் அமைக்கப்பட்டது; ஆஸ்திரியா ஜெர்மனியோடு ஒன்ருயிற்று; 'ஸெகோஸ்லோவிகியா'வும் 'போலண்டு'ம் 'ருமேனியா'வும் ஒவ்வொன்ருக செயிக்கப்பட்டன. எப்பொழுது யுத்தம் செய்ய வேண்டிவரும் என்பதையும் ஹிட்லர் அறிந்திருந்தார். மீண்டும் படை திரட்டுதல், 'ரைன்' பிரதேசத்திலே அரண் அமைத்தல், ஆஸ்திரியாவை ஜெர்மனியோடு பிணைத்தல் ஆகிய இவை யுத்தமின்றி ஆகக்கூடியவை. 'ஸெகோஸ்லோவாகியா'வைக் கைப்பற்றுவது யுத்தமின்றி ஆகாத காரியம் என்று நினைத்தார்; ஏனெனில், அந்நாட்டிற்கும் பிரான்ஸிற்குமுள்ள உடன்படிக்கையின்படி, பிரான்ஸ் யுத்த சகாயம் செய்யவேண்டும். பிரான்ஸ் சகாயத்திற்கு வராது என்று யாரால் எதிர்பார்க்க முடியும்? அதனுல் ஹிட்லர் 1938 ஆகஸ்டு-செப்டம்பரிலே யுத்தந் தொடங்குவதற்கு ஆயத்தமானுர்.

'ஸெக்' சாதியார் ஏணிப்படி போல்வர்

ஆயினும், அப்பொழுது யுத்தம் தொடங்கப்படவில்லை. ஏன் என்று இங்கு ஆராய வேண்டுவதில்லை. ஒன்றை மட்டும் அறிந்து கொள்ளவேண்டும்: ஹிட்லர் 'ம்யூனிக்' கிலே பெற்ற அதிகாரத்தோடு, அதாவது, 'ஸெகோஸ் லோவாகியா'வை எப்பொழுது வேண்டுமானாலும் விழுங்கலாம் என்று அதிகாரம் பெற்றதோடு, திருப்தியடைய மாட்டார் என்பது 'மைன் காம்ப்' என்னும் நூலைக் கவனித்து வாசிப்பவர்கள் அறிவார்கள். 'ஸுடெடன்' பிரதேசம், 'ப்ராக்', 'ப்ருனு' முதலிய இடங்களை ஆக்கிரமிப்பதோடு திருப்தியடையமாட்டார் என்பதும் திண்ணம். காலத்திற்கு ஏற்றவாறு 'இவ்வளவோடு திருப்தி கொள்கிறேன்' என்று ஹிட்லர் சொன்னாலும், அச்சொல் இந்நூலிலே விவரித்த கொள்கையோடு மாறுபடுவதால் பொய்யேயாகும். ஜெர்மானியர் குடியேறுவதற்குக் கிழக்கே விசாலமாகவுள்ள பிரதேசங்களைக் கைப்பற்றவேண்டும் என்பதே ஹிட்லரின் முக்கியமான கொள்கை. இவ்வெண்ணம் நிறைவேறுவதற்கு, 'பொஹிமியா', 'மொரேவியா' முதலிய சனநெருக்கமுள்ள நாடுகளைக் கைப்பற்றுவதால் ஒன்றும் அனுகூலம் இல்லை. இனி நடத்தவேண்டிய பெரும்போரிலே செயம் பெற்றுக் கீழ்நாடுகளைக் கைப்பற்றி முன்னேறுவதற்கு மிதித்து மேற்செல்லும் படிகள் போன்றன இவ்வெற்றிகள்.

ஹிட்லரின் முக்கிய கருத்து

ஹிட்லர் முக்கியமாகக் கொண்டுள்ள கொள்கை 'லெபென்ஸ்ரெளம்' எனப்படும். அதாவது, 'தன் சாதிக்குப் போதுமான நிலப்பரப்பு வேண்டும்; ஜெர்மானியருக்குத் தேவையான நிலப்பரப்பு இல்லை' என்பதே. (இந்தக் கொள்

கையை இவர் கைவிட்டதாக நினைப்பதற்கு, 'ருஷியா'வோடு ஒப்பந்தம் செய்யும்வரை, யாதொருகாரணமும் இல்லை.) இந்நூலில் எங்குப் பார்த்தாலும் இக்கொள்கைதான். ஜெர்மானியர் 1914-க்கு முன் பிறநாட்டு விவகாரங்களிலே கையாண்ட முறைகளை இவர் கண்டிப்பதற்கு இக்கொள்கை தான் காரணம். ஜெர்மானியருக்குப் புது வாசஸ்தலங்களைத் தேடிக் கொடுப்பதன்றோ ஜெர்மானிய மந்திரிகளின் முக்கிய கடமை? அவர்கள் இங்கிலாந்துக்கும் ருஷியாவுக்கும் நீண்ட காலமாகவுள்ள பகைமையை யறிந்து இங்கிலாந்தோடு சேர்ந்துகொண்டு ருஷியாவைத் தோற்கடித்து, வெற்றி பெற்றதன் பயனாகத் தன் பங்குக்கு ருஷிய நிலப்பகுதிகளைப் பெறவேண்டாமா? அதை விடுத்து, ஜெர்மன் மந்திரிகள் கடலுக்கு அப்பாலுள்ள குடியேற்ற நாடுகளென்றும் ஏற்றுமதி வசதிகளென்றும் கப்பற்படை என்றும் பிதற்றி இங்கிலாந்தோடு விரோதம் செய்து கொண்டார்கள். நசிக்கும் தறுவாயிலுள்ள ஆஸ்திரியா-ஹங்கரி நாடுகளுக்கு உதவ நினைத்து வீண்செலவு செய்தார்கள். இப்படி உதவுவது ஜெர்மானியர் கிழக்கு ஐரோப்பாவை ஆக்கிரமிப்பதற்குத் தடையாகிவிடும் என்பதை மறந்துவிட்டார்கள். யுத்தத்திற்குப்பின்பும் பழைய ருஷிய-பிரஷிய சினேகத்தைப் பாராட்டிச் செய்து கொண்ட 'ரபல்லோ' உடன்படிக்கையையும் இவர் கண்டித்தார். வெளிநாட்டு விவகாரத்திலே மட்டும் இக் கொள்கையைக் கைப்பிடிக்கவில்லை; உள்நாட்டு விவகாரங்களிலும் இக் கொள்கையைக் காணலாம். கிராம வாழ்க்கையிலும் விவசாயத்திலுமே இவர் மனம் ஈடுபட்டது. 'வியன்னு' விலே தொழிலாளிகள் பட்ட துன்பங்கள் இவர் மனதைப் புண்ணாக்கிவிட்டன. 'நகரங்களும் தொழிற் சாலைகளும் ஆள் தின்னி அரக்கர்களே; குடிசைகளும் கைத் தொழிலுமே மனிதர்களுக்கு மனுஷத்தன்மை அளிப்பன'

என்பதே இவர் திடமாகக் கொண்ட கருத்து. 'யுத்த தளவாடங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளைத்தவிர, மற்றத் தொழிற்சாலைகளை அதிகமாக்கக்கூடாது. நாட்டிற்கு வேண்டிய பொருளை மட்டும் தயாரிக்க வேண்டும்; ஏற்று மதிச் சாமான்களைத் தயாரிக்கக்கூடாது. நாடும் நகரமும் ஒன்றுக்கொன்று உதவுவதாக வேண்டும். எதிர்காலத்திலே ஜெர்மனி விவசாயத்தை அடிப் படையாகக் கொண்ட நாடாகவே மேன்மைபெறவேண்டும்' என்றெல்லாம் எண்ணினார். ஆதலால் பிறநாடுகளைக் கைப்பற்றவேண்டும் என்னும் கொள்கையைக் கைவிட்டால், இவ்வாறெல்லாம் இவர் எண்ணிய எண்ணங்கள் நிறைவேறுவதற்கு வழியில்லை. நாட்டின் நன்மையையும் மேன்மையையும் கருதி, இவர் அமைத்த திட்டங்கள் எல்லாம் பாழாகிவிடும்.

பிற நாடுகளைக் கவர்தலே கடமை

திரும்பத் திரும்ப ஒரே பல்லவிதான்:

> நாட்டின் நன்மையைக்கோரும் அரசாங்கத்தின் முக்கிய திட்டமானது தம் சாதியினர் இப் பூமண்டலத்திலே நிலைத்து வாழ்வதற்கான வசதிகளை அதிகப்படுத்துவதாக இருக்கவேண்டும். இப்பொழுதுள்ள சனத்தொகையையும் அது விருத்தியாகும் அளவையும் கணக்கிட்டு நாட்டிலுள்ள நஞ்சை புஞ்சைகளையும் கணக்கிட்டு, இவை போதுமா என்று கவனிக்கவேண்டும். பொது சனங்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கு, இருக்கிற நிலங்கள் போதாவிட்டால், அயலாருடைய நிலங்களைக் கைப்பற்றவேண்டும். (*181-வது ஜெர்மன் பதிப்பு, பக். 728*)

வெளி நாட்டு நடவடிக்கைகளில் எது முக்கிய நோக்கமாக இருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டதோ, அதுவே 'நாஷனல் ஸோஷலிஸ்ட் கட்சி'யின் முதற் கடமையாகக் கூறப்பட்டுள்ளது:

'நாஷனல் ஸோஷலிஸ்ட்' இயக்கமானது இப்பொழுது சனத்தொகை அதிகமாகவும் நிலம் கொஞ்சமாகவும் இருக்கும் நிலைமையை மாற்ற முயலவேண்டும். நிலந்தான் நமக்கு ஜீவாதாரம் ஆகும். இதை ஊன்று கோலாகக் கொண்டுதான் நாம் வல்லரசு ஆக வேண்டும். நமது புராதனப் பெருமை யெங்கே? தற்பொழுது கதியற்றுக் கிடக்கும் நிலைமை எங்கே? மீண்டும் நாம் மேன்மை பெற முயல வேண்டும். நாமே இப் புவியிலே மிகவுயர்ந்த சாதி; நம்முடைய சாதிக்குரிய சிறப்புகள் அழிந்து போகாவண்ணம் பாதுகாத்தல் நமது கடமை. உயர்ந்த சாதியிற் பிறந்தவர்களுக்கே கடமையும் அதிகப்படும். ஜெர்மானியர்களை யெல்லாம் சாதியுணர்ச்சி யுடையவர்களாக்கித் தங்கள் கடமையைச் செலுத்துமாறு செய்வதே நமது கட்சியின் நோக்கம். (ஷி. பக் 732)

மேற்கண்ட திட்டத்தின்படி, பிறருடைய நிலங்களைக் கைப்பற்றினுல் அவர்களுடைய உரிமையை மறுப்பதாகுமே என்று எவரும் ஆட்சேபனை செய்யக்கூடாது.

தேசங்களின் எல்லைகள் மனிதனுலே ஏற்பட்டவை தானே? மனிதனுல் அவைகள் மாற்றி யமைக்கக்கூடியவைகள் தானே. (ஷி. பக். 740)

ஆதலால் பிறர் நிலங்களை அபகரிப்பதும் அபிவிருத்தியைக் கோருவோரின் கடமையே யாகும்.

வேண்டிய நிலத்தைப் பெருததால் நாடு முழுவதும் நாசமடைந்து விடும் என்ருல், நிலங்களின் சம்பந்தமான உரிமைகள் கடமைகளாக மாறிவிடும். (ஷி. பக். 741)

எவ்வளவு ஆக்கிரமிப்பு வேண்டும்?

எங்கெல்லாம் ஆக்கிரமிக்க வேண்டும் என்பதை ஹிட்லர் பின்வரும் பகுதியிலே சுருங்கக் கூறுகிருர்:

இன்று ஐரோப்பாவிலே எட்டுக்கோடி ஜெர்மானியர்கள் வாழ்கிருர்கள். இன்னும் ஒரு நூற்ருண்டிற்குள்

இந்த கண்டத்திலே வாழும் ஜெர்மானியரின் தொகை 25 கோடியாதல் வேண்டும். அவர்கள் இப்போது மற்றை யோர்க்காகத் தொழிற் சாலைகளில் உழைக்கும் கூலியாட்க ளாக நகரங்களிலே அடைபடாமல், கைத்தொழில் செய் வோராகவும் அவர்களுக்கு உணவளிக்கும் குடியானவர்க ளாகவும் வாழவேண்டும். (ஷை. பக். 767)

ஜெர்மன் அதிகாரிகள் கைப்பற்ற வேண்டிய நிலப் பரப்பு எவ்வளவு விஸ்தீர்ணமுள்ளதாக இருக்கவேண்டும்? ஜெர்மானியரின் தொகை மும்மடங்கு அதிகமானாலும், அவர் களுள் ஒவ்வொருவருக்கும் இப்போதுள்ளதைப் போல இரண்டு மடங்கு நிலம் வேண்டும். இப்படிக் கணக்கிடும் போது, ஜெர்மனியிலே வாழ்வோரைமட்டும் கணக்கிடக் கூடாது; ஐரோப்பாவிலேயுள்ள ஜெர்மானியர்கள் எல்லோ ரையும் சேர்த்துக் கணக்கிட வேண்டும். எனவே, ஜெர்மா னிய இராச்சியம் இப்பொழுதிருப்பதினும் ஆறு மடங்குக்கு மேல் அதிகரித்த விஸ்தீர்ண முடையதாக வேண்டும். அழிந்துபோகாது தப்பிப்பிழைத்த 'ஸ்லாவ்' சாதியினரும் இங்கே அடிமைகளாக வாழவேண்டு மாகையால், இதுகூடப் போதாததாகிவிடும். எப்படியும் 'உக்ரைன்' பிரதேசத்தை மட்டும் கைப்பற்றினுற் போதாது. அதற்கப்பாலுள்ள பிர தேசங்களிலும் கண்ணுக இருக்கவேண்டும். மேலே குறித்த வாக்கிய மொன்றிலே 'தொழிற்சாலைக் கூலி' என்று ஹிட்லர் சொன்னதைக் கவனியுங்கள். ஏற்றுமதிச் சரக்குக ளைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளை நினைத்தாலே எவ்வளவு இகழ்ச்சியும் அருவருப்பும் இவருக்கு! தொழிற்சாலைகளே இங்கிலாந்தை 'உலகத் தொழிற்சாலை' என்று சென்ற நூற்றுண்டிலே பெருமையடித்துக் கொள்ளச்செய்தன. ஹிட்லர் தாம் விரும்பியதை அடைவதற்கு அரசியல் முறை யிலும் போர் முறையிலும் எவ்வளவு இடையூறுகள் நேரக்

கூடுமாயினும், இவ்வாறு ஆக்கிரமிப்பதற்கு மலை கடல் முதலிய இயற்கை யிடையூறுகள் ஒன்றும் இல்லை என்பதையும் மறக்கக்கூடாது. ஐரோப்பிய-ஆசிய சமவெளியையும் அங்கே சாகுபடிக்கு ஏற்றதாயுள்ள பெருநிலப் பகுதிகளையும் இருப்புப் பாதைகள் இல்லாத முற்காலத்தில் கவனிப்பார் இல்லை; இன்றுகூட, ஐரோப்பாவின் மேற்குப்பாகத்தில் வாழ்வோரிற் பெரும்பாலோர் இவ்வாறு வசதியான நிலங்கள் அருகில் இருப்பதை அறிந்து கொள்ளவில்லை. ஆனால், ஹிட்லர் இதனை அறியாதவர் அல்லர்.

பிரான்சும் பிரிட்டனும் என்ன செய்யவேண்டும்?

'மைன் காம்ப்'பிலேயுள்ள முக்கியமான பாகங்களை மேலே விவரித்தோம். 'பிரான்சு ஜெர்மனிக்கு ஜென்ம விரோதி' என்பனபோன்ற சில வசனங்களே திரும்பத் திரும்பச் சொல்லப்படுகின்றன. அவற்றைவிட, மேற்கூறிய வாக்கியங்களே ஹிட்லரின் மனப்பாங்கை நன்கு விளக்குவன. தம்மைப் பின்னுலிருந்துகொண்டு தாக்குவதைத் தடுப்பதற்கே பிரான்சுடன் போர் புரியவேண்டிவரும் என்று ஹிட்லரே கூறியுள்ளார். தாம் கீழ்நாடுகளை விழுங்க எத்தனிக்கும்போது பிரான்சு சும்மா பார்த்துக் கொண்டிராது என்றே நினைத்தார். பிரான்சு சும்மா இருக்கலாமா? கீழ் நாடுகளை ஹிட்லர் தாக்குமுன், அவருடைய பசியை ஆற்றுவதற்கு அவற்றையெல்லாம் அவருடைய பெரு வயிற்றுள் திணித்துவிடலாமா? பிரிட்டனும் இவ்வாறு திணிக்க முயலுமா? இந்த வினுக்களுக்கு விடை காணுதல் அவசியம். இவற்றை யொட்டி 'மைன் காம்ப்' என்ன சொல்கிறது? மேலெழுந்த வாரியாக நோக்கினுல், பிரிட்டன் சம்பந்தப்பட்ட வரையிலும் இந்நூலிலே சொல்லப்படுவது திருப்திகரமாகவே தோன்றும். 1914-க்கு முன்பு ஜெர்மானிய

மந்திரிகள் ஏக காலத்தில் எல்லா நாடுகளையும் வெவ்வேறு வகையிலே பகைத்துக் கொண்டார்கள் என்று ஹிட்லர் குறை கூறுகிறார். அடுத்த போரிலே சில நாடுகளின் நட்பையாவது ஜெர்மனி பெறவேண்டும் என்கிறார். எவை நட்புக்குரிய நாடுகள் என்றால், இத்தாலியும், பிரிட்டனுமே என்று விடையளிக்கிறார். அவர் அதிகாரத்திற்கு வந்ததும் செய்த காரியங்கள் இந்நூலில் சொல்லப்பட்டவாறே நடைபெற்றன. முதலில் இத்தாலியின் நட்பை விரும்பிப்பெற்றார். பிரிட்டிஷாரின் நட்பையும் கோரினார். 'ம்யூனிக்' ஒப்பந்தம்வரை, பிரிட்டிஷாரும் விட்டுக்கொடுத்துக் கொண்டே இருந்தார்கள். 'வயிறார உண்ணட்டும்' என்று பல பிரிட்டிஷ் தலைவர்கள் சும்மா இருந்துவிட்டார்கள். இப்படியே நினைத்து பிரிட்டிஷ் சர்க்கார் 1938-ல் 'ஸெகோஸ்லோவாகியா'வையும் பலி கொடுத்தார்கள்.

'மைன் காம்ப்' நிதான நடத்தையைக் கண்டிக்கிறது

ஆயினும் இந்நூலை ஒழுங்காக வாசிப்பவர்களுக்கு பிரிட்டிஷார் நினைத்தது தவறு என்பது தெளிவாகும். தயை, தாட்சிணியமின்றி அதிகாரம் செலுத்துவதின் அவசியத்தை இந்நூல் ஆரம்பமுதல் முடிவுவரை வற்புறுத்துகிறது. 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்னும் கொள்கையைத் திடமாகக் கொண்டுள்ளது. 'கீழே விழுந்தவனைக் காலால் உதையாதே' என்றால், 'பின் எதற்காக அவனைக் கீழே தள்ளினேன்?' என்று ஹிட்லர் வினவுவார். 'சமயம் வாய்த்தபோது பயன்படுத்திக் கொள்ளவேண்டும். உலகிலுள்ள அரசுகளையெல்லாம் இரண்டு கட்சிகளாகப் பிரித்து, அவற்றை ஒன்றுக் கொன்று எதிரிடையாக்கிச் சமாதானம்

என்னும் தராசை நடு நிலையில் நிற்கச் செய்வது என்னும் கொள்கையில் ஹிட்லருக்கு நம்பிக்கை இல்லை. தான் ஸ்தாபிக்கும் ஜெர்மன் ஏகாதிபத்தியமானது இக்கொள்கைக்கு முற்றிலும் விரோதமானது. ஜெர்மனியின் யுத்த பலம் மற்ற நாடுகளின் மொத்த பலத்தைவிட அதிகமாயிருக்க வேண்டும். பழைய கண்டங்களிலோ புதிய கண்டமாகிய அமெரிக்காவிலோ எவராலும் இதை எதிர்த்து நிற்க முடியாதபடி இருக்கவேண்டும்'. இவ்வாறு கூறும் நூலிலே, பல நாடுகளும் ஒத்து வாழவேண்டும் என்ற நிதான புத்தி காணப்படுமோ? சில பிரிட்டிஷார் 'நமக்குக் கப்பற்படை இருக்கிறதே' என்று தைரியமாக இருக்கிறார்கள். 'ஹிட்லரின் சேனை தரையிற் செய்யும் யுத்தத்தில் எத்தனை பலம் கொண்டதாக இருந்தாலும், பிரிட்டனும் ஐக்கிய நாடுகளுமாய்க் கடலைக் கட்டி ஆள்வதற்குத் தடங்கல் ஏற்படாது' என்று இவர்கள் நினைக்கிறார்கள். 'கப்பல்களை எஃகுத் தகடுகளால் கட்டிக் கொள்ளலாம்; கப்பற் படையைப் பிறரைக் காட்டிலும் வேகமாகத் திரட்டலாம்' என்பதை இவர்கள் மறந்து விடுகிறார்கள். ஹிட்லரின் புது ஜெர்மனியானது ஐரோப்பா முழுவதையும் கொண்டதாக அமையும்; அதனால் ஆட்படை, எஃகு, நிலக்கரி, பெட்ரோல் முதலியவை ஏராளமாகக் கிடைக்கும்; பிரிட்டிஷ் தீவுகளைப் புதிய ஜெர்மனியோடு ஒப்பிட்டால் சிறு குள்ளனையும் பெரிய ராக்ஷஸனையும்போல இருக்கும். பிரிட்டிஷ் தீவுகள் கடலிலே அரசு செலுத்த முடியாவிடின் எங்குமே ஆட்சி செலுத்த முடியாதனவாகி விடும். 1939 ஆகஸ்டு வரையில் ஹிட்லர் தம் நூலிலே வகுத்த திட்டங்களில் இரண்டிலே மட்டும் மாறுதல் செய்திருக்கிறார். அவ்விரண்டு மாறுதல்களும் அவர் அடிப்படையாகக் கொண்ட கொள்கையைத் திடப்படுத்துகின்றன. ஒன்று, ஜெர்மனிக்குரிய குடியேற்ற நாடுகளாக இருந்து தற்காலத்தில்

பிரிட்டிஷார் கண்காணிப்பிலுள்ள நாடுகளைப் பற்றியதாகும்.[1] 'மைன்காம்ப்'பிலே, "குடியேற்ற நாடுகளைப் 'போனால் போகட்டும்' என்று விட்டுவிடலாம்; இதற்காக பிரிட்டிஷாரோடு சண்டை போடவேண்டியதில்லை" என்றார். அதிகாரத்திற்கு வந்த பிறகு, இந்நாடுகளைத் திரும்பப் பெறவேண்டுமென்று பலத்த கிளர்ச்சிகளை எழுப்பினார். பிரிட்டிஷாரின் நியாய புத்தியையும், விட்டுக்கொடுக்கும் சுபாவத்தையும் அறிந்தே இவர் இவ்வாறு செய்தார் என்னலாம். ஏனென்றால், 'மைன் காம்ப்'பிலே வற்புறுத்திக் கூறப்படுவது ஒன்று உண்டு. 'ஒருவன் உனக்கு எவ்வளவு விட்டுக்கொடுக்கிறானோ அவ்வளவும் அவனிடமிருந்து வாங்கி விடவேண்டும்'. அதிகாரம் செலுத்தும் முறை பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:—

> வெற்றி பெற்றவன் புத்திசாலியானால், கூடியவரையில் தோற்றவரிடமிருந்து தனக்கு வேண்டியவற்றையெல்லாம் ஒவ்வொன்றாக வசூலித்து விடுவான். தாங்களே தோற்றோம் என்று கீழ்ப்படியும் ஜனங்களிடத்தில் தைரியம் முதலிய நற்குணங்கள் நாளடைவில் நசித்துப்போகும். இவர்களைப் படிப் படியாகத் துன்புறுத்தினால், 'இந்த ஒரு கொடுமையைச் சகிப்போம்; இதற்காகப் போர் புரிவதா?' என்று சும்மா இருந்துவிடுவார்கள். கொடுமைகளை எதிர்க்காமல் ஏற்றுக்கொள்வதால் அவர்களுக்கிருந்த வீரம் குறைந்து விடும். பல கொடுமைகள் தொடர்ந்து வந்தாலும் ஒவ்வொன்றையும் தனிப்பட்ட கொடுமையாகக் கொண்டு, அது காரணமாக எதிர்ப்பது நியாயமன்று என்றுகூட எண்ணும்படி செய்துவிடும். (*181*-வது பதிப்பு, பக். *759*)

இந்த வாக்கியங்கள் *1918*-க்குப் பிறகு ஜெர்மனிமீது

[1] மற்றொன்று, உள்நாட்டிலே நாஜி சர்க்காரையும் மத ஸ்தாபனங்களையும் பற்றிய விஷயம்.

பிரஞ்சுக்காரர் செலுத்திய கொடுமைகளைக் கூறுமிடத்தில் உள்ளனவாயினும், ஹிட்லர் விரோதிகளின் செயல் முறைகளைக் கவனித்தறிந்து அம் முறைகளையே இன்னும் கடுமையாகக் கையாளும் இயல்புடையவர் ஆகையால், அவை மேலே தரப்பட்டன.

ஹிட்லரும் உலக அமைதியும்

உலக அமைதியைப்பற்றி ஹிட்லர் கொண்ட கருத்தை விளக்கும் பகுதி இது:

> உலகில் அமைதியை நிலை நாட்டி நன்மைகளை விளைக்க நினைப்பது நன்றே; ஆனால் ஒரு நிபந்தனை: மானிடசாதிகளுள் மிகச்சிறந்தது எதுவோ அதுமட்டுமே மேலோங்கிப் பூமி முழுவதையும் அடக்கி யாளவேண்டும். இந்த நிபந்தனையை ஒப்புக்கொண்டால், சமாதானப் பேச்சுக்கு விஷயமே இராதல்லவா? இரண்டாவது கட்சியில்லாத வரையில், 'சமாதானம்' என்ற பேச்சினால் யாதொரு கேடும் விளையாது. ஆதலால், முதலிலே யுத்தத்தைக் கவனிப்போம்; பிறகு, வேண்டுமானால் சமாதானக் கொள்கையைக் கவனிக்கலாம். (ஷை. பக். 315-16)

'அமைதி என்பது உடன்படிக்கைகளால் நிலைப்பதன்று; வெற்றிதான் நிலைத்த அமைதியைத்தரும்' என்பதே மேற் கூறியதின் பொருள். பூமி முழுவதிலும், ஜெர்மானியர் தனியரசு செலுத்த வேண்டும் என்பதே இவரது நோக்கம்.

> உலகில் வாழ விரும்புவோன் யுத்தஞ் செய்யவேண்டும். ஓயாத யுத்தம் நடைபெறும் போர்க்களமாகிய இவ்வுலகிலே யுத்தஞ் செய்யத் தயங்கும் சோம்பேறிக்கு வாழ உரிமையில்லை. (ஷை. பக். 317)

இதோ இன்னொரு அர்த்த புஷ்டியுள்ள வாக்கியம்:

'அச்சு' ஏற்பாட்டின் தன்மையை அறிய விரும்புவோர் இதனைக் கவனிப்பாராக:

'யுத்தத்தை எதிர்பார்த்துச் செய்து கொள்ளப்படாத எந்த உடன்படிக்கையும் பயன்படாது; அது மதியீனத்தையே விளக்குவதாகும். (ஷை. பக். 749).

இலட்சியவாதமும் மனக்கசப்பும்

'மைன் காம்ப்'பின் ஆசிரியருடைய சுபாவத்திலே இலட்சியவாதமும் மனக்கசப்பும் ஒருங்கே காணப்படுவதால், ஐரோப்பாவிற்கு அபாயம் விளைந்தது. தமக்கு ஈவிரக்கம் சிறிதும் இல்லையென்று இவர் பெருமை கொள்கிறார். ஒரு சொல்லோ செய்கையோ நியாயமானதா என்று தெரிந்து கொள்வதற்கு இவர் கையாளும் பரீட்சை ஒன்றுதான்: 'அது பயன் தருமா, தாராதா?' வெற்றி தருமானால், எதுவும் அநியாயமாகாது. இவ்வாறு தந்திரத்தையும் முரட்டுத்தனத்தையுமே இந்நூல் ஆதரித்தாலும், தாம் தீவிரமாகக்கொண்ட இலட்சியத்தின்படி இவர் நடக்கிறார். ஆனால் இந்நூலில் அடிக்கடி குதர்க்கமும் காணப்படுகிறது. இவரிடத்தில் இலட்சியவாதமும் குதர்க்கமும் கலந்திருப்பது 'அர்ச பவுல்'* என்பவரை ஞாபகப்படுத்துகிறது. நியாயக் கட்டுகளைத் தளரவிட்டுச் சிற்றின்ப நுகர்ச்சியை நோக்கமாகக் கொண்ட தன்னலக்காரர்கள் மிகுந்த இக்காலத்திலே, முயற்சி, கடமை, தன்னலம் கருதாமை, பொது நன்மைக்காகத் தன் உரிமைகளை தியாகம் செய்வது ஆகிய மேன்மைக்குணங்களை ஜெர்மானியர் கைக் கொள்ளவேண்டும் என்று, தயை தாட்சிணியமின்றி வற்புறுத்தும் மதகுருவின் பிரசாரம் போன்றது இந்நூல். இதன் பயனாக ஹிட்லருக்கு அதிகாரம் கிடைத்தது. 'ஜீவசக்தியே ஜடப்பொருளை இயக்குவது' என்றும்,

* *St. Paul.*

'மனோ பலமே வெற்றிக்கு வழிகாட்டும்' என்றும் நம்பின தால் காரியசித்தி பெற்றவர்களுக்கு ஹிட்லரே ஓர் அரிய உதாரணமாகின்றார்.

இவரது மனோதைரியம்

இவரது மனோதைரியத்தை விளக்கும் வாக்கியம் ஒன்றை இங்கு உதாரணமாகக் காட்டலாம். 'ஆயுதங்கள் எல்லாம் அபகரிக்கப்பட்டுச் சக்தியற்றிருக்கும் ஜெர்மனி எப்படி ஆயுதங்களைச் சேகரிக்கும்' என்று ஹிட்லரைப் பரிகசித்தவர்களுக்குப் பதில் சொல்லுமிடத்திலே இவ் வசனம் காணப்படுகிறது. அக் காலத்தில் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி ஜெர்மனி பீரங்கிகளையோ, யுத்த விமானங்களையோ, 'டாங்கு'களையோ உற்பத்தி செய்யவும் சேகரிக்கவும் கூடாது; சேனையும் சிறியதாகவே இருக்க வேண்டும். இந்த நிபந்தனைகளுக்கு ஜெர்மனி கட்டுப்பட்டு இருந்தது. ஆகையால், போர்க்களத்தில் அது எவ்விதத் தீங்கும் செய்ய இயலாததாய்ச் சக்தியற்றிருந்தது. அண்டை யிலுள்ள நாடுகளோ, ஜெர்மனியைச் சக்தியற்றதாகவே இருக் கச்செய்யும் அதிகாரமும் சக்தியும் கொண்டிருந்தன. அப் படிச் செய்வதிலும் அவைகளுக்கு சிரத்தை இருந்தது. இதற்கு ஹிட்லர் என்ன பரிகாரம் கூறுகிறார்?

பழைய பலத்தை ஜெர்மனி மீண்டும் பெறவேண்டு மென்றால், 'ஆயுதங்களைத் தயாரிப்பது எப்படி?' என்று கேட்கக்கூடாது. 'ஜனங்களை ஆயுத பாணிகளாக மாற் றக்கூடிய மனோதைரியத்தை எப்படி விருத்தி செய்ய லாம்?' என்றே கேட்கக்கூடும். மனோதைரியம் மட்டும் ஜனங்களிடம் இருந்தால், வேண்டிய ஆயுதங்களை அவர்கள் பெறுவதற்கு ஆயிரம் வழிகள் தோன்றக்கூடும். கோழை யின் கையிலே பத்துத் துப்பாக்கிகளைக் கொடுத்தாலும், அவனை எதிர்த்தால் அவனால் ஒரு வெடிகூடச் சுட இய

லாது. மனோதைரியமுள்ளவன் சிறு முட்செடியைக் கையிற் கொண்டு செய்யக்கூடிய எதிர்ப்புக்கூட இவனால் செய்ய முடியாது. (ஷை பக். 365-6).

கர்வங்கொண்டு பேசிய வெறும் பேச்சு அன்று இது; முழுதும் உண்மையேயாகும். ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்ந்த நிகழ்ச்சிகளே இதனை விளக்கும். 1933ல் ஹிட்லர் சர்வாதிகாரம் பெற்றவுடனே, வல்லரசுகளை இலட்சியஞ் செய்யாமல், அவர் தடபுடலாக யுத்த தளவாடங்களைச் சேகரிக்கத் தொடங்கினார். அவரைச் சூழ்ந்துள்ள பல நாடுகளுள் ஒவ்வொன்றும் கையிலே பத்துத் துப்பாக்கிகளைக் கொண்டதாக இருந்தும் (விரலை அசைத்தால், ஹிட்லர் யுத்த தளவாடங்களைச் சேகரிப்பதைத் தடுத்து விடலாம் என்றாலும்) அவை எல்லாம் செயலற்றிருந்தன. ஒன்றுக்காவது மனோதைரியம் இல்லை. சிறு முட்செடியைக் கையிலே படையாகக் கொண்ட தைரியசாலியே, வரப்போகும் யுத்தத்திற்கு ஜெர்மனியை தயாராக்கிவிட்டார்.

2620

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 SEP 1941
MADRAS

PRINTED IN INDIA AT
THE INTERNATIONAL PRINTING WORKS, NUNGAMBAUKAM, MADRAS.

'மைன் காம்ப்'

'மைன் காம்ப்' என்னும் நூலைப்போல உலகெங்கும் அபக்கியாதி பெற்ற நூல் வேறொன்றும் இல்லை. வெகுகாலமாக 'நாஸி'களால் (*Nazis*) வேதம்போற் கருதப்படும் இந்நூல் உள்நாட்டு விவகாரங்களிலும் வெளிநாட்டு விவகாரங்களிலும் 'நாஸி'கள் கைக்கொள்ளும் முறைகளை விளக்குவதால், உலகில் ஒரு முக்கிய ஸ்தானம் பெற்றுள்ளது; ஆனால், விஷயங்களைக் குழப்பிக்கூறி நீள வளர்த்துக்கொண்டு போவதால், இந்நூலை வாசிப்போர் அலுப்படைவார்கள். ஜெர்மானியர் அல்லாத வெளி நாட்டார் இந்நூலின் பொருளைத் தெரிந்து கொள்ளாமல் அலட்சியமாக இருந்துவிட்டார்கள். இந்நூலின் தன்மையை ஆராய்ந்து, இதிற் காணப்படும் கொள்கைகளைத் தெளிவாகக் கூறுவது இச்சிறு நூல்.

மிஸ்டர் என்ஸார் 'ஆக்ஸ்போர்ட்'டில் 'கார்ப்பஸ் கிறுஸ்தி' (*Corpus Christi*) கலாசாலையில் (*Fellow*) ஆசிரியராக இருப்பவர்; இவர் 'இங்கிலாந்து *1870–1914*' (ஆக்ஸ்போர்டு இங்கிலாந்து சரித்திரம், புத்தகம் *14*) என்னும் பெரு நூலை இயற்றியவர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 SEP 1941
MADRAS

HITLER TAN SUPĀVATHTAI VELIPPADUTHTI YELUTHIYA 'YEN PIRAYATHTINAM'

Translated from

HERR HITLER'S SELF-DISCLOSURE IN *MEIN KAMPF*

by R. C. K. ENSOR

(*Oxford Pamphlets on World Affairs No. 3*)

OXFORD UNIVERSITY PRESS

As. 3